# தஞ்சாவூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
(13.01.2016 முதல் 17.01.2016 வரை)

தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம், ஆடுதுறை – 612 101

போன் : 0435 2472098 E-mail: dirtrri@tnau.ac.in - Fax: 0435 2472881


===========================================================================

தேதி :12.01.16

**கடந்த 4 நாளில் நிலவிய வானிலை (08.01.2016 – 11.01.2016)**

| காரணிகள் | கடந்த வார வானிலை |
|---|---|
| மழை (மி.மீ) | 0.0 |
| அதிகபட்ச வெப்பநிலை(டி.செ) | 31 |
| குறைந்தபட்ச வெப்பநிலை(டி.செ) | 23 |
| மேக மூட்டம் | 4 |
| ஈரப்பதம் (%) | 85 – 86 |
| காற்றின் வேகம் (கி.மீ.) | 2 – 3 |

**அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு**

| காரணிகள் | எதிர்பார்க்கப்படும் வானிலை | | | | |
|---|---|---|---|---|---|
| | தேதி-1 13/01/16 | தேதி-2 14/01/16 | தேதி-3 15/01/16 | தேதி-4 16/01/16 | தேதி-5 17/01/16 |
| மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 0 | 0 |
| அதிகபட்ச வெப்பநிலை(டி.செ) | 31 | 31 | 31 | 31 | 31 |
| குறைந்தபட்சவெப்பநிலை(டி.செ) | 22 | 22 | 22 | 22 | 22 |
| மேக மூட்டம் | 4 | 4 | 4 | 4 | 4 |
| ஈரப்பதம் (%) | 70 – 84 | 70 – 84 | 70 – 84 | 70 – 84 | 70 – 84 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணிக்கு) | 2 | 2 | 2 | 2 | 2 |
| காற்றின் திசை | கிழக்கு | கிழக்கு | கிழக்கு | கிழக்கு | கிழக்கு |

13.01.2016 முதல் 17.01.2016 வரை வானம் சற்று மேகமூட்டத்துடன் இருள்சூழ்ந்து காணப்படும். மழை இல்லை

***வேளாண் அறிவுரைகள் :***

**முக்கிய பயிர்: நெல்**

**சம்பா : அறுவடை பருவம் ; தாளடி: முதிர்ச்சி பருவம்**

- அடுத்த ஐந்து நாட்களுக்கு வறண்ட வானிலை எதிர்பார்க்கப்படுவதால் அறுவடை நிலையில் உள்ள சம்பா நெல்லினை அறுவடை செய்து நன்கு காய வைத்து ஈரத்தன்மை 13 சதவீதத்திற்கு கீழ் இருக்குமாறு சேமித்து வைத்து பூச்சிகள் இல்லாமல் பாதுகாக்கவும்.
- பின் சம்பா மற்றும் தாளடி நெற்பயிரில் துத்தநாக சத்து பற்றாகுறை தென்பட்டால் 0.5 சதம் ஜிங்சல்பேட் மற்றும் யூரியா 1 சதம் கரைசலை இலைகளின் மேல் படும்படி தெளிக்கவும்.
- தற்பொழுது நிலவும் வானிலையின் காரணமாக தாளடி நெற்பயிரில் பாக்டீரியா இலைகருகல் நோய் பரவலாக தென்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு 20 சதம் பசுஞ்சாணக் கரைசலை நோய் அறிகுறி தென்பட்ட உடன் ஒரு முறையும் பிறகு 15 நாட்கள் கழித்து ஒரு முறையும் தெளிக்கவும் (40 கிலோ பசுஞ்சாணத்தை 100 லிட்டர் தண்ணீரில் கரைத்து இரவு முழுவதும் ஊறவைத்து தெளிந்த நீருடன் மேலும் 100 லிட்டர் தண்ணீர் சேர்த்து ஒரு ஏக்கரில் தெளிக்கவும்) அல்லது காப்பர் ஹைட்ராக்ஸ்சைடு 500 கிராம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.
- அறுவடை நிலையில் இருக்கும் முதிர்ந்த சம்பா நெல் வயல்களில் மெழுகு பதத்தில் நெல் தரிசு உளுந்து, பச்சைப்பயிறு விதைப்பதற்கு ஏற்ற தருணம். உளுந்து ஆடுதுறை 3 மற்றும் பச்சைப்பயிறு ஆடுதுறை 3 ஆகிய இரகங்கள் நெல் தரிசுக்கு ஏற்ற இரகங்கள்.

இயக்குநர்